28th January 1956] [Sri C. Subramaniam]

development of the country, I am sure persons who are responsible would realise that it is better to leave these things to the Members of the Legislature representing public opinion and Government that is responsible to the legislature to take necessary action and to get these things redressed as far as possible through the Government and the Legislature and carry on their normal activities. That would be my appeal to them.

Once again, I would like to express, on behalf of the Government the appreciation of the general calm and restraint which we have shown in spite of our disappointment and discontent with reference to the decision given in regard to Peermede and Devikulam. That is all I have got to say, Sir, and I am sure hon. Members would bear these in mind and create an atmosphere outside also so that there would be calm and peace outside and these matters could be considered in a detached and calm atmosphere and proper decisions taken.

SRI C. KANDASAMY : கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றியும் சென்னை அரசியல் விஷயத்தைப் பற்றியும் பின்னால் ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கிச் சொல்லுகிறேன். நான் சொன்ன விஷயங்களை கனம் மந்திரி அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ திரித்திக் கூறியிருக்கிறார்கள். நான் ஒரு விஷயத்தை மட்டும் இப்பொழுது குறிப்பிடுகிறேன். ராஜ்ய புனரமைப்பு விஷயமாக தேவிகுளம், பீர்மேடு, கூடலூர், காஸர்கோட் இவைகளைப்பற்றி ஜனங்களின் மத்தியில் தீவிர அபிப்பிராய பேதம் நிலவி வருகிறது என்று தான் நான் சொன்னேன். இந்த சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றி கனம் மந்திரி அவர்கள் கூறியதைப்பற்றி பின்னால் ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கிக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

IV.—MOTION FOR LEAVE OF ABSENCE OF A MEMBER.

MR. SPEAKER : The hon. Member, Mr. Uppi, has given notice of a motion under Rule 11 of the Assembly Rules for grant of leave of absence to Mr. K. M. Seethi Sahib. He will move it.

* SRI K. UPPI : Sir, I move—

"That, under Rule 11 of the Madras Assembly Rules, leave of absence be granted by this House to Sri K.M. Seethi Sahib, till 15th April 1956, from the date of his absence."

Mr. Seethi Sahib attended a committee meeting at Madras early in July last and immediately after he returned to his place, he was taken seriously ill. He is now convalescing and it is the opinion of doctors that he should not take part in public activities for another two or three months. Therefore, I would request the House to accept this motion unanimously.

SRI T. C. NARAYANAN NAMBIAR: I second the motion.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I support the motion. We are all sorry that ill-health has prevented Mr. Seethi Sahib from attending the meeting of the Assembly. We all hope

[Sri C. Subramaniam] [28th January 1956

that he will soon be restored to health and will be amongst us to give us the benefit of his counsel in resolving the difficult problems facing this State to-day.

Mr. SPEAKER : The question is—

"That, under Rule 11 of the Madras Assembly Rules, leave of absence be granted by this House to Sri K. M. Seethi Sahib, till 15th April 1956, from the date of his absence."

The motion was put and carried.

V.—GOVERNMENT BILL.

THE MADRAS CULTIVATING TENANTS (PAYMENT OF FAIR RENT) BILL, 1956—*cont.*

Mr. SPEAKER : May I know when the Hon. the Minister will begin his reply?

The Hon. Sri M. A. MANICKAVELU : At one of the clock, Sir.

10-35 a.m. Sri V. MADANAGOPAL : நீண்ட நெடுங்காலமாக ஏற்கனவே வழக்கத்தில் இருந்து வந்த வார முறைகளை மாற்றிவிட்டு கடுமையான வார குத்தகை நிலவுகின்ற இன்றைய சூழ்நிலையில் சர்க்கார் விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கக்கூடிய முறையில் ஒரு நியாய வார மசோதாவைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்பதோடு இந்த மசோதாவில் உள்ள பிரதான குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று கோருகிறேன்.

பொதுவாக இந்தியாவிலுள்ள இதர ராஜ்யங்களில் நிலச்சுவான்தார்களுடைய வாரப் பங்கு எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்கு சென்னை ராஜ்யத்தில் குறைக்கப்படாமல் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கக்கூடிய பங்கு அதிகமாக இருப்பதைப் பற்றி சர்க்கார் எவ்வித காரணமும் கூறவில்லை. சென்னை ராஜ்யத்தில் உள்ள நிலங்களில் அதிகமான விளைச்சல் கண்டு முதலாகிறது என்று பேசப்படுகிறது. குறிப்பாக பம்பாய் ராஜ்யத்தை விட சென்னை ராஜ்யத்தில் 16 சதவிகிதம் அதிக விளைச்சல் ஏற்படுகிறது. சென்னை ராஜ்யத்தில் விவசாயம் எந்த முறையில் நடத்தப்படுகிறது, விவசாயத்துக்கு எந்த அளவுக்கு உழைப்பு அதிகம் செலுத்தப்படுகிறது, நில விஸ்தீரணம் எவ்வளவு, விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மக்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்ற விஷயங்களை கணக்கில் எடுத்துக் கொண்டால், இதர ராஜ்யங்களை விட, இந்த ராஜ்யத்தில் சாகுபடியாளருக்குக் கிடைக்கக் கூடிய பங்கைக் குறைப்பதற்கு எந்த விதமான காரணமுமில்லை. விவசாய உற்பத்தியில் பாடுபடக்கூடிய விவசாய மக்களுக்கு நியாயமான பங்கு கிடைப்பதின் காரணமாக விவசாயம் மேன்மேலும் வளர்ச்சியுறும் நிலைமை ஏற்படுகிறது. தேசத்தில் வசிக்கக்கூடிய பெரும்பாலான விவசாய மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரிப்பதின் மூலமாகவும் உள் நாட்டு மார்கட்டை விஸ்தரிப்பதின் மூலமாகவும்தான் தேசத்தில் தங்கு தடையின்றி வெகு துரிதமாக ஒரு தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும். ஆகவே, மிராசுதார்களை பாதிக்கப்போகிறது என்ற விஷயத்தைப் பொருட்படுத்தாமல் பெரும்பாலான மக்களுடைய நலனையும் தேசத்தின் பொது நலத்தையும் மனதில் கொண்டு அந்த அடிப்படையில் இந்த மசோதாவைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.